**முக்கிய அம்சங்கள்**

கடன் வழங்குதலுக்கான சேவைகளுக்காக 'முடிவுக்கு முடிவுக்கு' எனும் அடிப்படையில் தீர்வுகளை வழங்குவதன் மூலம், இந்த தளம் முழுமையான சுற்றுச்சூழல் அமைப்பு, அனைத்து செயல்பாடுகளை உள்ளடக்கிய தன்மை பதிலளிக்கவல்ல நிலை ஆகியவற்றை உண்டாக்கி, நிரந்தரமான தீர்வுகளைக் கொடுத்துள்ளது. இந்தப் பூச்செண்டில் உள்ள சில:

**1. எந்த நேரத்திலும் அணுகல்:**

நிதி மற்றும் நிதி சேவைகள் அணுகும் வழியை எளிதாக்க உதவுகிறது, தடைகளை குறைப்பதோடு பான் இந்தியா அடிப்படையிலான சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளது. (1.25 லட்சம் வங்கி கிளைகளில் 1.06 லட்சம் வங்கி கிளைகளை தற்போது இணைக்கப்பட்டுள்ளன) மற்றும் கைபிடித்து உடனழைத்துச் செல்லும் தொழில் சேவை (17000க்கு மேற்பட்ட முகவர்கள், தங்கள் கருத்துக்களை வடிவமைத்து, தொழில்நுட்பம் கொண்டு இயங்கி / நிதி / திறன் பயிற்சி, வழிகாட்டுதல், மார்ஜின் தொகை/ மானியம் பெறுதலுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பல). இது நேரடியாக கடன் விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க உதவுகிறது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தை செயலாக்க மூன்று விருப்பமான வங்கி / வங்கிக் கிளைகளைத் தேர்வு செய்ய அனுமதிக்கிறது. ஒரு நிலைப்படுத்தப்பட்ட கடன் விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக் கொண்டபின், முழுமையான ஒப்புதல் வழங்குதல் செயல்முறை, அனைத்து வங்கிகளின் மத்தியில் நிலையாக்கப்படுகிறது. இடைமுக வசதி மூலம், தேர்வாளர்கள் பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். விண்ணப்பதாரர்களுக்கான விழிப்பூட்டல் (பதிவு, பரிவர்த்தனை துவக்கம் / முடித்தல், ஒப்புதலின்மை / நிராகரிப்பு ஆகியவை) மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பங்குதாரர்களுக்கு விரைவான பதில்களை பெறவும் வழிவகுக்கப் பட்டுள்ளது.

அவர்களது செயல்பாடு மற்றும் தொழில்நுட்பம் குறித்த சந்தேகங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், அவர்களுக்கு உதவுவதற்கான பயனாக்கம் மற்றும் ஆதரவிற்காக அணுகக்கூடிய இடம் தயாராக உள்ளது. இவை அனைத்தும் எங்கும், எப்போதும் 24 X 7 எனும் அடிப்படையில் கிடைக்கும் .

2.**இ-பாகுபாடு** - வருங்காலத்தில் தொழிலதிபராக விளங்கக் கூடிய ஒருவர் தனது விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவலின் அடிப்படையில், தளத்தில் உள்ள சுய மதிப்பீட்டுச் செயலி விண்ணப்பதாரரை 'ட்ரெய்னி' (trainee) என்றோ (தொழில் முனைவோராகத் தயாராவதற்கு முன்னர் தேவைப்படும் பயிற்சி தேவை) அல்லது 'ரெடி' (ready) (நேரடியாக வங்கியை அணுகலாம், விவரம் தெரிந்தவர்) என்ற வகையாக இனம் கண்டு அவரை ஒரு கைபிடித்துச் செல்லும் ஆதரவாளரிடம் வழிகாட்டுதல் பெற்றுக் கொள்வதற்காக ஒப்படைக்கும். ஆர்வமுள்ளவர்கள் ஸ்டாண்டப் இந்தியா மூலம் விண்ணப்பம் செய்பவர்கள் அவர்களது நிலைபற்றிய வழிகாட்டுதல்களைப் பெறுகிறார்கள்.

**3. போட்டி மற்றும் வெளிப்படைத் தன்மையை வெளியிடுதல்** - இ-கடன் சந்தையில் வங்கிகளின் இலவச வணிக வழிவகுக்கும் உதவி மற்றும் ஆதாரத்துடன் விளங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்னுதாரண முயற்சிகள் அல்லது வழிகாட்டி முகவர்களின் ஆலோசனைகள் ஆகியவற்றினால், தளத்தை விஜயம் செய்பவர்கள் நல்ல பலம்

பெறுகிறார்கள். இப்போது விண்ணப்பதாரர்கள் தங்கள் வங்கிகளை தளத்தில் தேர்ந்தெடுக்கிறார்கள். விண்ணப்பம் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (NER – தவிர) இங்கனம் ஒரு பயனாளி பல விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான ஆய்வகத் தரவின் (என்ஜசியின்) குறியீட்டுடன் இது செயல்படுத்தப்படுகிறது. விண்ணப்பதாரருடன் கலந்துரையாடல்களுக்குப் பிறகு, விண்ணப்பம் மறுபரிசீலனை செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளது. கடன் வழங்கப்படும் வரை விண்ணப்பங்கள் மின் இ-சந்தையில் இருக்கும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பங்குதாரர்களும் விண்ணப்பத்தை கண்காணிக்க முடியும். தனிப்பயனாக்கப்பட்ட டாஷ்போர்டு மூலம் சமீபத்திய கடன் தொடர்பான முடிவுடன் அவர்கள் இணைந்திருக்கலாம்.

**ஒரே இடத்தில் மொத்தத் தொடர்பு** – தளமானது ஒருவித நகல் உறவு மேலாளராக விளங்கி அனைத்து திட்டங்களையும் பயனாளிகளை அணுகுமாறு செய்யும் (மானியத் திட்டங்கள் மற்றும் தரப்படுத்தப்பட்ட விண்ணப்பம்). எளிமையான மொழியில் இருப்பதால் புதிதாக தளத்தை விஜயம் செய்பவர் இதை எளிதாக உபயோகிக்கலாம் (ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் உள்ளது). வழிகாட்டிச் செயல்கள் ஒரு காட்சிப் படமாக (ஆடியோ விஷுவல் -AV) இருந்து, நிலையான பிரசுரங்கள் மற்றும் ஃபிளையர்கள், பயனர் கையேடுகள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (இது வங்கியாளர்கள், விண்ணப்பதாரர்கள், கைபிடித்துச் செல்லும் முகவர் பயனுக்காக), பயனுள்ள இணைப்புகள் முதலியன விண்ணப்பதாரர்களுக்கு மிகவும் உதவியாகக் கூடியவை. அனைத்து தரப்பினருக்கும் எளிமையான வழிநடத்துதலுக்காக (ஏவி-காட்சிப்படம்) தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தி மற்றும் ஆங்கிலப் பதிப்புகள் தவிர, 8 பிராந்திய மொழிகளில் (மராத்தி, குஜராத்தி, பெங்காலி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், தமிழ் மற்றும் ஒடிய), விண்ணப்பதாரர்களின் நலனுக்காகவும் அவர்களை கைபிடித்துச் செல்லும் வழிகாட்டிகள் பயனுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அணுகல்

இந்த தளமானது பல வகையான எம்எஸ்எம்இ கடன் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. அதாவது முத்ரா, ஸ்டாண்ட் அப் மற்றும் எம்எஸ்எம்இ கடன்கள் (1 கோடி வரை)

அனைத்திற்கும் உள்ளடக்கிய அணுகல் முறை - இது நிதி மற்றும் நிதி சாராத சேவைகளை மூன்று தனித்துவமான அம்சங்களுடன் அணுக வகை செய்துள்ளது.

- ஆன்லைன் கைபிடித்துச் செல்லும் ஆதரவைத் தேடுதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் விருப்பமான வங்கிகளுக்கு ஆன்லைன் மூலம் கடன்களுக்காக விண்ணப்பித்தல்
- விரைவான கடன் செயலாக்கத்தை செயல்படுத்துதல்

சிட்பியின் உதயமிமித்ரா தளத்தில் நுழைகையில், பதிவு மற்றும் உள்நுழைவுக்காக, பயனர் வழிநடத்தப்படுவார். வருங்காலத் தொழில் முனைவோரால் வழங்கப்பட்ட தகவல் கொண்டு, விண்ணப்பதாரர்களை இதில் உள்ள செயலி அவர்களை 'பயிற்சி தேவையானவர்கள்' (அவர்களுக்குத் தேவைப்படும் கைபிடித்துச் செல்லல் / பயிற்சி) மற்றும் 'தயாரானவர்கள்' (ரெடி) (கடனளிப்பவர்களிடமிருந்து கடனைப் பெறத் தயாராக இருப்பவர்கள்) என்றவாறு

வகைப்படுத்தும். தயார் நிலையில் உள்ளவர்கள் கடன் விண்ணப்பத்தை ஆன்லைனில் உடனடியாக சமர்ப்பித்து, பெற்றுக் கொண்டதற்காக ஒப்புதலை எஸ்எம்எஸ் / மின்னஞ்சல் மூலம் உடனடியாகப் பெறலாம். கடன் விண்ணப்பதாரரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிக்கு இது செல்லும். அதே நேரம் வங்கியின் முகமை (நோடல்) அதிகாரிக்கு கடன் குறித்த ஆன்லைன் அறிவிப்பும் சென்றடையும்.

நிதியல்லாத சேவைகள் அணுகல் - விண்ணப்பதாரர் சேவைகளைப் பெற அவரது முன்மொழியப்பட்ட நிறுவனத்திற்கு (பதிவு செய்யப்பட்ட நேரத்தில் கொடுத்துள்ள மாநில மற்றும் மாவட்ட அடிப்படையில்) தனது வீட்டின் அருகேயுள்ள உகந்த கைபிடித்துச் செல்லக்கூடிய நிறுவனத்தின் தொடர்பு விவரங்களைத் தேடலாம். இந்த நிபுணத்துவம் பல்வேறு துறைகளில் மிக்க தேர்ச்சி வாய்ந்ததாக உள்ளது. அதாவது, விண்ணப்பம் பூர்த்தி செய்தல் / திட்ட அறிக்கையை தயாரித்தல், நிதியியல் பயிற்சி, திறமைப் பயிற்சி, வழிகாட்டுதல், தொழில் முனைப்பு அபிவிருத்தி திட்டம், வேலைத் தளங்கள் மற்றும் பல்வேறு மாநில / மத்திய / நிறுவனங்களால் இயக்கப்படும் மானியம் குறித்த விவரம் / மானிய திட்டங்கள் ஆகியவற்றில் தேர்ந்திருக்கும்.

பங்குதாரர்கள், ஆர்வலர்களுக்கான இடைமுகம் - ஊடாடும் தகவல் பரிமாற்ற வழிமுறைகளை மேம்படுத்துவதற்காக பங்குதாரர்களுடனான செய்திகளை பரிமாற்ற உதவுகிறது. கடன் விண்ணப்பத்தை ஆய்வு செய்த பிறகு, தேவைப்பட்டால், வங்கியாளர்கள் கூடுதலான தகவலைப் பெற எண்ணினால், அவற்றை விண்ணப்பதாரர்கள் தளம் மூலம் சமர்ப்பிக்கலாம். உத்தரவாத பாதுகாப்பு – தளமானது உத்தரவாத அரவணைப்பை தற்காலிக தகுதித் திறனை வைத்து ஒரு குறிப்பீடாக வழங்கி, அதனுடன் ஒரு தகுதி குறித்த சரிபார்க்கும் பட்டியலையும் வழங்குகிறது.

டெஸ்க்டாப், மடிக்கணினி, மொபைல் மற்றும் கையில் வைத்து இயங்கக்கூடிய அனைத்து கருவிகளின் மூலம் இந்த இணையதளத்தை அணுகலாம். முழு தகவலும் தளத்தில் ஒரே வீச்சில் கிடைக்கும். இந்த தளத்தைக் காண்பவர்கள் நன்கு விவரமறிந்த வாடிக்கையாளராகி, எந்த ஒரு நிறுவனத்தையும் அணுகுவதற்கு தயார் நிலையில் அவர்களை இருக்கச் செய்கிறது. கட்டணம் ஏதுமின்றி இலவசமாக இணையதளத்தை அணுகலாம். தொலைதூர பகுதிகளிலிருந்தே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. வங்கிக் கிளைகளுக்கு அருகாமையில் இருத்தல் கடன் வாங்குவதற்கான ஒரு அடிப்படையே அல்ல. இணையத்தின் பரவலாக்கத்தின் காரணமாக வங்கிக் கிளைகளை அணுகுவதற்கு வழக்கமான நடைமுறைகளைப் போலன்றி, இப்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டு, வங்கியாளர்கள் கடன் வாங்குபவர்களை அணுகிக்கொண்டு வருகின்றனர். விண்ணப்பதாரர்கள், கோரிக்கைக்கு அழைப்பு மற்றும் பதிலளிக்கும் வகையில் தனிப்பட்ட அனுபவங்களை கொண்டுள்ளனர்.

உத்தரவாத பாதுகாப்பு – தளமானது உத்தரவாத அரவணைப்பை தற்காலிக தகுதித் திறனை வைத்து ஒரு குறிப்பீடாக வழங்கி, அதனுடன் ஒரு தகுதி குறித்த சரிபார்க்கும் பட்டியலையும் வழங்குகிறது.